உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௮] 1919ஸு ஜனவரிமீ [பகுதி ௧.

பணிசெயல்.

—:0:—

தொகுதி - 7 - பகுதி 12 - பக்கம் - 269 - தொடர்ச்சி

மலமாசகற்றித்து மாசிற்கழிந்த மணியே போன்று ஒளிரும், உண்மை அடியாரையும், மாகாருண்யராய் பசுபதியையும் வணக்குங்காலத்துத் தலை யீற்றுப்பசுவானது தன்புனிற்றிளங்கன்றைக் கண்டகாலத்து மனங்களித்து ஆசை மிகுந்து அதனிடம் செல்வதைப் போல் சென்று வணங்குதல் வேண்டும். அவ்வாறன்றி மனம் ஓர்வழியும் செயல் ஓர்வழியும் இருக்குமாயின் அதனால் எண்ணிய பயனுங் கூடாது, இறைவனது காருண்யத்தையும் அடைதற்கில்லாமற்போம். இதனை

“ நெக்குளார்வ மிகப் பெருகி நினைக்
தக்குமாலே கொடக்கையிலென்றுவார்
தக்க வாணவராய்த் தகுதியது
நக்க நாம நமச்சிவாயவே. ”

சித்தாந்தம்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவு நீருங் கண்டு
நக்கு நிற்பனவர்தமை நாணியே."

தேவாரங்களே விளக்கும். இவ்வாறு பத்தி செய்து தம் செய்தவரே பெரிய புராணத்துள்ள நமது நாயன்மார்கள்

" கடவுத்தீவண்ணன் கண்ணொன்றிடந்த
மறைச்சிலம்பார்த்த மலரடிக் கணியப்
பரிதிகொடுத்த கருதி நாயகற்கு
முடிவிளக்கெரித்துங் கடிமலர்க்கோதைச்
சுரிகுழற் கருங்கட்டுணைவியை யளித்தும்
அருமகனறும்பூங் கருமயிருதவியும்
தென்முலை வாரி யின்னமுதருத்தியும்
கோவணநேர்தலை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படுபணி மீனரற் கெனவிடுத்தும்
பூட்டி யரிவாளூட்டி யரிந்தும்,
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும
மொய் மலர்க்கோதைகம் மலர் அணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றஞ்செய்த சுற்றம் களைந்தும்
பூக்கொளுமாதின் மூக்கினையரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டை நாளொரு சிலர் தொண்டராயினர்
செங்கண் மாதடக்கையிற் சங்கநாண
முட்டாட்டாமரை முருக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாத வூரன்ப
பாடும் பணிதீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண் பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடிபட்டும்
நின்னைத் தொண்டனென்னைக் கொண்டனன்
இருங்கு மடக்க லரக்க னெடுப்ப

RL73 M211,N1L

மூங்கைபோல உரை பொரு மெய்ம்மையின்
மலைமகட்டுமை மணமகிழ் வோனே" எனினும்

திருப்பாடல் நில காட்டும். இவ்வாறு கட்டளையின்படி விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாகிய செயல்களைச் செய்யின் மலத்திரை நீக்கப்பெற்று, பாலில் நெய்போலும், விறகிற்றீப்போலும் மறைந்து இடைக்கும் கடவுள் எழுந்தருளுவன். இதனை

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே." என்னும் கட்டளையே அறிவிக்கும். இவ்விதம் இறைவனைத் தரிசிக்கப்போந்த அவசரமே என்னிறந்த பிறவிகள் கடந்தடைந்த மனிதப்பிறவியினாலாய பயனையடைதற்குரிய காலமாகும். (இதனைக்)

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே." என்னும்

"ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப் பொழிற்றில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாடொழ." என்னும்

அருள்செய்த திருவாக்குக்களை எடுத்துக்காட்டும். ஆயின் இதற்கெல்லாம் படிகளாகிய முன் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கனுள் சரியையே எதற்கும் காரணமாகும்.

அதனை

"வேதமுடனாகம புராண மிதிகாசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே
விரிவாவெடுத்துரைக்கும்
ஓதரியதுவிதமே அத்துவிதஞானத்தை
யுண்டுபணு ஞானமாகும்

ஸோகமனுபவம் வசனமூன்றுக்கு மொவ்வும்
அபயவாதிகள் சம்மதம்
ஆதலினெனைக் கினிச் சரியை யாதிகள் போது
மியாதொன்று பாவிக்கநான்
அதுவாதலாலுன்னை நானென்றுபாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்
அதுபாவித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தை நீகுறையுமுண்டோ
இகபர விரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே." என்னும்

திருச்செய்யுளிற் காண்டலின் அமையும். ஆயின் சரியை என்பது எது வெனின்.

"நிலை பெறுமாறெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா
சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்மா தீயென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே"

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன் பிலை யென்புருகிப்
பாடுகின்றிலைப் பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன்றறியேனே."

என்னும் ஆசாரிய சுவாமிகள் திருவாக்குகளால் உய்த்து உணர்ந்து பணி செய்து உய்ந்து போவோமாக.

சுபம்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கந்தரலங்காரத்தின் ஓர் பாசுரம.

"பெரும் பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்றபேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பினான் மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந்துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே".

ஸ்ரீ முருகப் பெருமானது முதற் றொண்டராகிய ஸ்ரீமத் அருணகிரி நாத சுவாமிகள் தம்முடைய சிவானுபவத்தை உலகமறிந்துய்யும் பொருட்டு திருவாய்மலர்ந்தருளிய இச்செய்யுளின் பொருள் ஆராயற் பாலது. பெரிய பசுமையாகிய காட்டகத்தே சிறிய தினைப்புனத்தைக் காக்கின்ற பேதைப்பருவமுடைய வள்ளி நாயகியது கொங்கைகளை விழையும் முருகப் பெருமானை மெய்யன்பினால் மெல்ல மெல்ல உள்ளுவதினால் புதிது புதிதாகத் தோன்றும் ஒப்பற்ற உயர் பேரின்பத்தை இனிது சுவைத்து உணர்வெய்திய பொழுதே கரும்புங்கைத்து, செந்தேனும் புளித்து முழுமையும் வெறுக்கத்தக்கதாயிற்று என்பது வெளிப்படையான பொருள்.

உற்று நோக்குங்கால் பிறிதொரு வகையில் சிறப்பாகப்பொருள்கொள்வது முண்டு. பெரிதாகிய புதுவளமிக்க பேரண்டத்தின் கண்ணே சிறிய உடம்பாகிய ஊன் பிண்டத்தைக்காவல் கொண்டுள்ள உயிர், அறியாமை மிக்க உயிரினை பெத்தநிலை முத்தநிலை என்னுமிரண்டின்கண்ணும் கருணை கூர்ந்து தமது திருவருட்சத்தியால் வழிப்படுத்தி உய்விக்கும் பற்றற்ற அழகனாகிய முருகப்பெருமானை உண்மையன்பினால் பையப்பைய உள்ளத்தே நாடிக்காண்பதனால் தோன்றுவதாகிய அவனது திருவடித்தாமரையினின்று பொங்கிப் பெருகும் இணையில்லாத உயர்பேரின்பத்தை அனுபவித்து பெருவாழ் வெய்தியப்போதே பொருட் பிரபஞ்சமும் சொற் பிரபஞ்சமும் சுவையிழந்து வெறுக்கத்தக்கன வாயின வென்பது.

பைம்புனமென்பது இப்போது விளங்குகின்ற அண்டத்துக்கு எல்லையில்லாத அண்டங்கள் தோன்றிநின்று அழிந்தன பழைய ஆதல் நோக்கி இதனைப் புதுவனமிக்கதாகக் கூறுவார் 'பைம்புன' மென்றார். புதுமத்தப்புலன மென்றதும் இக்கருத்துப் பற்றியே போலும்.

அண்டத்தினுளடங்கிய சிறிய தொன்றாகலின் பிண்டத்தைச் 'சிற்றில்' என்றார். அறியாமையாலே ஊனுடம்பையும், அதன்வாயிலாகப் பெறும் சிற்றின்பங்களையுமே பெரியவாகமயங்கி அதனையே பற்றிக் கிடக்கின்றமையால் 'காக்கின்றபேதை' என்றார். அப்பற்று விட்டால் மெய்ப்பொருளை யறியு மறிவு நிகழுமென்பது. 'ஊனைக்காவல் கைவிட்டுன்னை உவப்பாருணர்வாரே' என்ற திருவாக்கும் காண்க.

அறிவித்தாலன்றி அறியாத் தன்மையுடைமையாலும் பேதை என்றென்றலுமுண்டு. ஆன்மாவைப் பெண்ணாக உருவகம் செய்யவே பெண்தன்மை தரத்தக்க இருமுலைகளை, ஆன்மாவின் தன்மையை புணர்த்தும் பெத்தநிலை முத்தநிலை என்னுமிரு நிலைகளையும் உருவகிப்பதற்கு பயன்படுத்தினமை காண்க. இது ஒருபிடையுருவகம்.

இருநிலையின் கண்ணும் ஆன்மாவினிடத்தே மாறாத பெருங் கருணையுடைமையால் விரும்பு மென்றார். அங்ஙனம் விரும்பிய காலத்தும் தம்வயமுடையவராய் தன்னிலானந்தமுடையவராய் தமக்காக ஒருபயனும் வேண்டாதவன் முதல்வன் என்பார் குமரன் என்று விசேடித்தார். குமரன் என்பதன் பொருள் மன்மதனையும் தோல்விக்கும் பேரழகுடையானென்பது. சேர்ந்தனது அருளழகை நோக்க மாறனது மையலழகு குர்ச்சிதமாமென்றவாறு. பேரழகுடையானெனவே குமரப்பெருமான் பரமானந்த சொரூபி என்றது பெறப்பட்டது. மெய்ப்பாம் பொருளாகிய அப்பெருமானிடத்தே மெய்யன்பு செலுத்தினாலன்றி பயனில்லை என்பார் 'மெய்யன்பினால் உன்னை' என்றார்.

"என்பே விறகாய் இறைச்சி யறுத்திட்டு
பொன்போலெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழைந்தார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்த வொண்ணாதே"

"பத்தர்தம் பத்தியிற் பாற்படினல்லது
முத்தினை யார்சொல்ல முற்றுகின்றாரே"

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே."

என்னும் திருவாக்குகளால் அது தெள்ளிதிற்புலனாம்.

'மெல்ல மெல்ல வுள்ள' என்றது ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையனாதலின் அவன் பக்குவத்திற்கேற்பப் படிப்படியாக பையப் பைய மேன் மேற் செல்லுவானாதலின் என்க.
அது "கள்ளினறி ஊடுமே மெள்ள மெள்ள வெளியாய்

கலக்கவருநல்ல உறவே" என்றார் ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்.
பரயோகானுபவம் தொடங்கி நிகழுங்கால்

'பையப் பையப் பழுக்கு மருட்கனி' என்றவாறும்

'புணருந்தோறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்' என்னும் மறைக் கருத்துக்கிணங்கவும் நவ நவ மாக உதித்து எழுதலின் 'அரும்பு' மென்றார்.

'அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்' என்ற மணிவாசகத்திற் குறித்தாங்கு பிறிதொரு பொருளிடத்தே இல்லாததோர் அளவிலா ஆனந்தமாதலின் 'தனி' என்றார்.

'ஆனந்தமயோப்யாஸாத்' என்ற வேதாந்த சூத்திரத்திற் குறித்தவாறு அப்பியாசத்தினால் உயர்ந்த ஆனந்தத்தைக் குறிப்பதற்குப் 'பரமானந்த' மென்றார். அப்பியாசமாவது ஒத்துப் பார்த்தல். அது தைத்திரிய சுருதியில் ஆனந்த வகைகளை ஒப்பிட்டு ஒன்றின்மேலொன்றாக அளவிட்டுரைக்குமிடத்தில் மனித ஆனந்தம், மனித கந்தருவானந்தம், தேவ கந்தருவானந்தம், பிதிர் தேவதானந்தம், தேவானந்தம், சுவபாவ தேவானந்தம், இந்திரானந்தம், பிரிகத் பதி யானந்தம், அதனிற் சதமடங்கு மேம்பட்ட பிரஜாபதியானந்தம், பிரமானந்தம் என்னுமுறையாகக் கூறுவதால் வேதாந்த சூத்திரமுடையார் அப்பியாசத்தினாலே ஆனந்தமயர் என்று இறைவனை விதந்தோதினார். அப்பெற்றித்தாகிய பேரானந்தமானது என்றுமொருபடித்தாய் இனிமை மிக்குடைமையின் 'தித்தித்து' என்றார். அவ்வானந்தந்தான் ஆன்மா என்றும்நுகர்தற் குரியது அன்றே

ஆன்மாவின் சிறப்பிலக்கண மென்பதனை அநுபவ ஞானத்தால் பெற்ற அக்கணமே பொருட் பிரபஞ்சம் சொற்பிரபஞ்ச மென்னும் இருவகைப் பாசமும் வெறுப்புத் தந்து கெடுதலின் 'அதிர்த வன்றே கரும்புங் கைத்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே' என்றார்

கரும்பு என்றது பொருட் பிரபஞ்சத்தை. என்னை? பொருட் பிரபஞ்சம் கரும்புபோல பல பொருட் பிண்டமா யிருத்தலின்.

செந்தே னென்றது சொற்பிரபஞ்சத்தை. என்னை? கரும்பின் சாறு போல ஒலிப்பொருளினும் நுண்ணிதாய் கலப்பின்றி யிருத்தலோடு மந்திர முதலியவாய் சுத்தவித்தையின் கண்ணும் எழுதலின். செம்மை என்ற அடை கொடுத்ததும் அக்காரணம் பற்றியேயாம் என்க.

கரும்பின் சக்கையானது சாறொடு கலந்து கைத்தலின் 'துவர்த்து' என்றார். சாரளவிலுள்ள தேன் புளிக்கு மியல்பிற்று. இறுதியிற் கைத்த தென்று சொன்னது வெறுக்கத்தக்க தென்னும் பொருளிற்று. பர போகத்தின்கண்ணே ஆன்ம பந்தமானது அடங்கி நில்லாது அறவே ஒழிதலின் அறக் கைத்த தென்றா ரென்க.

இருவகைப் பிரபஞ்சமும் கடத்தலை சிவானுபவச் செல்வராகிய பட்டினத்தடிகளது திருவாக்கினாலு மறியலாம்.

'உரையின் வரையும் பொருளின் அளவு
மிருவகைப் பட்ட வெல்லையுங் கடந்து
தம்மையு மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினுந் தில்லை மன்றினுட
மாடு மம்பல வாண'

இருவகைப் பிரபஞ்சத்தையும் ஆசிரியர் திருமூலனார் இவ்வாறே கரும்பிற்கும் தேனிற்கும் உவமித்தது உற்று நோக்கற்பாலது.

"கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தி
லரும்புங் கந்தமு மாகிய வாலந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே"

(இது புதுப்பாக்கம் ஸ்ரீ சுப்பிரமணிய பக்த ஜனசபை ஆண்டு நிறைவு விழாக்காலத்தில் ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம்) அவர்களால் உபந்நியசிக்கப்பட்டது)